RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S112

# Changes in Brahmins' Social Life in the Contemporary Environment

## சமகாலச் சூழலில் அந்தணர் சமூக வாழ்வியல் மாற்றங்கள்

**A.R. Sathiyaprakash** [a,*]

[a] Department of Tamil, J.K.K. Nataraja College of Arts and Science, Komarapalayam-638183, Tamil Nadu, India.

*Corresponding author Email: tamilmanavansathyaa@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S112

Received: 13-04-2022; Revised: 14-07-2022; Accepted: 19-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Manu Dharma taught the occupations of castes based on the caste division of Brahmins. Tolkappiyam divided Brahmins based on occupation. It is not specified as a caste. Brahmins were regarded as wise men. Traditions like reciting the Vedas, cultivating pearls, etc., have existed since the Sangam period. Among them were priests who never knew the northern vernacular. Due to the importance given to northern priests, Tamil priests did not gain influence during the Pallava period. The influence of northern priests began to decline only after the emergence of the Tamil priest, Thirugnasambandar. An attempt to prioritise the Tamil priests during the Chola period is also seen in the Periyapuranam. Brahmins meant ascetics and later referred to Brahmins without ascendancy. Since then, Brahmins have been living without any major changes in their lives till today in terms of recitation of Vedas, following Vedic methods, clan discipline, self-control, self-renunciation, religious belief, character interests, etc. through tradition, environment, and family ties. They are giving advice to the rulers now as they used to do in those times, and they are helping them in administration without any manual labor. Since independence, the Brahmins who have been involved in various fields have made a great contribution to Tamil culture. Even today, they have been passing through many struggles against them in society and are quietly doing their work for society.

**Keywords:** Brahmins, Tamil Culture, Social Life, Struggle

**Language:** **Tamil**

## முன்னுரை

மனு ஸ்மிருதி மனிதர்களை வர்ண முறையில் நான்காகப் பிரிக்கிறது. வர்ண முறையில் பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர் என அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் பிரிக்கிறது. பிராமணர்கள் வேதம் ஓதுவதற்கும், பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கும், க்ஷத்ரியர்கள் ஆட்சி செய்து நீதி வழங்கவும், வைசியர்கள் நியாயமான வியாபாரம் செய்யவும், சூத்திரர்கள் உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளை செய்வதற்கும் பணிக்கப்பட்டனர்.

தொல்காப்பியம் செய்யும் தொழிலின் அடிப்படையில் 1. அந்தணர், 2. அரசர், 3. வணிகர், 4. வேளாளர் எனப் பிரிக்கப்பட்டனர். அந்தணர் எனும் சொல், எல்லாச் சமூகத்திலும் உள்ள சான்றோர்களைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு உரிய சொல் இல்லை. தொல்காப்பியமும் திருக்குறளும் அறத்தை உடையவரே அந்தணர் என்றும்; அருள் நெஞ்சம் கொண்டோரே அந்தணர் என்றும் குறிப்பிடுகிறது. அந்தணர் என்பது தற்கால வழக்கில் பிராமணரைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

## தொல்காப்பியமும் வள்ளுவமும்

"காமஞ்சான்ற கடைக்கோட்காலை

ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இருந்ததன் பயனே" (Subramanian, 2003)

அந்தணர் என்போர் அரசர், வணிகர், வேளாளர் ஆகிய முப்பிரிவு தமிழ் மக்களில், இல்வாழ்வு நடத்தி, அறிவும், வாழ்க்கை அனுபவமும் பெற்ற சிலர், குடும்பத்தைப் பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு, மக்களுக்குத் தொண்டாற்றும் பொருட்டு வீட்டை விட்டு வெளியே வந்து சமுதாயத் தொண்டாற்றியவர்களே ஆவர். அறத்தை உடையவர் யாவரேனும் அவரை அந்தணர் என்று குறிப்பிடலாம். திருமுறைகளில் குறிப்பிடப்படும் அந்தணர்களும் இத்தகையவர்களையே குறிப்பிடுகின்றன. வடமொழி வேதங்களை அடிப்படையாகக் கொண்ட இவர்கள் சைவ வேதியர்களாகவும் வைணவ வேதியர்களாகவும் வைதீக வேதியர்களாகவும் இருக்கின்றனர்.

அந்தணர்கள் ஓரிடத்தில் நிலைத்து தங்காமல், ஊர்தோறுஞ் சென்று மக்களுக்கு நல்வழிகளை எடுத்துக் கூறி வந்தனர். அதற்கு வசதியாய் வெய்யிலுக்குக் குடையும், செருப்பும், நீர் கொண்டு செல்ல செம்பும், ஊன்றுகோலும், படுத்துறங்கப் பாயும், அறநூல்களும் தங்களது உடமைகளாகக் கொண்டனர்.

"நூலே கரகம் முக்கோல் மனையே

ஆயுங்காலை அந்தணர்க் குரிய" (Subramanian, 2003)

அந்தணர் என்போர் தமிழ்ச் சான்றோர்களே தவிர, ஆரியப் பார்ப்பனர்கள் அல்லர்.

திருக்குறளில் அந்தணர் எனும் சொல் மூன்று குறள்களில் காணப்படுகிறது.

1."அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்"

2."அந்தணர் என்போர் அறவோர்"

3."அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்"

அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால், அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல (Parimelalhagar, 2002).

1. எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.
2. வேத நெறியை உள்ளிடக் கருதியோர் இக்குறளிலுள்ள அந்தணர் நூல் என்ற சொல்லுக்கு வைதீக வேதம் எனப் பொருள் தந்தனர். நீத்தாராகி அருள் நெஞ்சம் கொண்டோரை மட்டும் அந்தணர் என்று சொல்பவர் வள்ளுவர். அந்தணர் என்பவர் தொண்டுள்ளம்கொண்டு பணி செய்வர்; அறப்பண்புடையராய் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவர். அவர் இயல்பு அருளுடைமை. எங்கெங்கு துன்பம் கண்டாலும் அங்கெல்லாம் சென்று அவர்கள் துன்பம் துடைக்கப்பாடுபடுபவர். மனமாசுகளை அறுத்த இப்படிப்பட்ட நீத்தாரது நூலையே வள்ளுவர் இப்பாடலில் சொல்கிறார். அந்தணர் நூல் என்பதற்குப் பார்ப்பனர்க்கேயுரித்தெனச் சொல்லப்படும் வேதம் என்ற பொருளைக் கொள்ளாது வ. சுப. மாணிக்கம் குறிப்பிடும் அறவோர் செய்யும் நூல் அல்லது அறவோரின் கொள்கை என்று பொருள் கொள்வதே பொருந்தும்.

## சங்க இலக்கியங்களில் அந்தணர்

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயனை, ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் "பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் ஆறங்கங்களாலும் உணரப்பட்ட வேதத்துக்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோர்களாகிய புறச்சமயத்தார் (புத்தர், சமணர்) களின் மிகுதியை வீழ்த்தவேண்டியும், அவர்களது கருத்துக்களை மக்கள் ஏற்காமல் இருக்கவும் செய்ய இருபத்தொரு வேள்வித்துறைகளையும் குறைவின்றிச் செய்து முடித்தவர்களின் மரபில் வந்தவன் என்று கூறப்படுகின்றான்.

"ஆறுணர்ந்த ஒருமுது நூல் … உரவோர் மருக"

“திறம்புரி கொள்கை அந்தணர்” (Puliyur Kesikan, 2010)

“ஒதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல”

“புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப”

என்பதிலிருந்து வேதமும், வேள்வியும், அந்தணர் பங்களிப்பும் சங்க காலம் முதல் இருந்துவருகிறது என அறியமுடிகிறது (Puliyur Kesikan, 2002).

## அந்தணர் தொழில்

சூடாமணி நிகண்டு தரும் விவரத்தின்படி, பார்ப்பார் - வேதங்களைப் பார்ப்பவர், மறையவர் - மறை நூல் ஓதுதல் உடையவர், வேதியர் - வேதம் ஓதுதல் உடையவர், அந்தணர் -அழகிய தண்ணளி உடையவர். மனுதர்மம் கூறுவன யாதெனில் பிராமணர்கள் வேதம் ஒதுவதற்கும், பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கும், சத்ரியர்கள் ஆட்சி செய்து நீதி வழங்கவும்; வைசியர்கள் நியாயமான வியாபாரம் செய்யவும், சூத்திரர்கள் உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளை செய்வதற்கும் பணிக்கப்பட்டனர் என கூறுகிறது.

“கி.பி.4 நூற்றாண்டளவிலேயே இவ்வினமக்கள் பிராமணர்கள், சிரமணர்கள் என்ற நிலைகளில் இந்தியா முழுவதும் பரவி இருந்ததாகவும், இதில் பிராமணர்கள் நகருக்கு அருகில் உள்ள தோட்டத்தில் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்தாகவும், நாணல் புற்களினாலான படுக்கைகளில் படுத்துறங்கியதாகவும், மான் தோலை ஆடையாகவும், உடலின்பம் ஊன் உணவு ஆகிய இரண்டையும் துறந்து சதா கல்வி கேள்விகளில் ஈடுபட்டிருந்ததாகவும் அயல்நாட்டுப் பயணி மெகஸ்தனிஸ் கூறுகின்றார்” (Anumandhan, 1977).

(கி.பி.580-650) பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் அவர் மகன் நரசிம்மன் காலத்தில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் புகழ் ஓங்கி வளர்ந்தது இக்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய ஞானசம்பந்தர் கவுண்டின்ய கோத்திரத்தை சார்ந்தவர் என்றும் வேதங்களை அறிந்தவர் என்றும் முத்தீ வளர்த்தல், வேள்வி செய்தல் தன் குடியில் உண்டென்றும் கூறுகிறார். ஏனெனில் களப்பிரர் காலத்தில் சமண மதமும், பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வேதியர்களை விட்டுவிட்டு வடக்கே இருந்து வந்த ஆரிய வேதியர்களை கோயில் பூசைக்கு நியமித்தனர். அவர்கள் தமிழக மக்களின் பழக்க வழக்கங்களை ஒடுக்க முயன்றனர். அதனால் தமிழ்நாட்டு வேதியருக்கும் வடநாட்டு வேதியருக்கும் பகைமை உணர்ச்சி மேலோங்கியது.

வடநாட்டு வேதியர்கள் தாங்கள் வேதம் அறிந்தவர்கள் என்று தன்னை நிலைப்படுத்தும்பொழுது இங்குள்ள வேதியர்களும் வேதத்தை அறிந்தவர்கள் என்றும்; வேள்விகளைச் செய்பவர்கள் என்றும்; களப்பிரரும் பல்லவரும் போற்றாத தமிழின் பெருமையை எடுத்துக்காட்டவும்; சமணர்களுக்கு எதிராகவும் பௌத்தர்களுக்கு எதிராகவும் போராடக்கூடியவராக திருஞானசம்பந்தர் விளங்கினார்.

## சுந்தரர் காலத்து நாயன்மார்களில் அந்தணர் (கி.பி.840-கி.பி.875)

அப்பர் சம்பந்தர்ருக்கும் முற்பட்ட (கி.பி.300 - 600) காலங்களில் அந்தணராகப் பிறந்து வாழ்ந்த சண்டேசுரர், நமிநந்தி ஆகிய இருவராகவும்; சுந்தரர் காலத்துக்கு முந்தைய காலங்களில் அப்பர் - சம்பந்தர் காலத்து(கி.பி.600-660) நாயன்மார்களில் அந்தணராகப் பிறந்து வாழ்ந்த குங்குலியக்கலயர், முருகன், திருநீலநக்கர், அப்பூதி அடிகள் என நால்வராகவும்; அப்பர், சம்பந்தர் காலத்திற்குப் பின்பும் சுந்தரர் காலத்திற்கும்(கி.பி.840-865) இடைப்பட்டவர்கள் அதாவது (கி.பி.660-865) வரை உள்ள காலங்களில் பூசலார், காரி, உருத்திரபசுபதி, கணநாதர், சிறப்புலி, ஞானசம்பந்தர் என அறுவராகவும் வாழ்ந்துள்ளனர்.

அப்பர் சம்பந்தர்ருக்கும் முற்பட்ட அடியார் (கி.பி.300 - 600) காலங்களில் அந்தணர்களைப் பற்றிய தகவல் குறைவாக இருப்பதை நினையுங்கால் தமிழ் அந்தணர் அவ்வளவு செல்வாக்கு பெறவில்லை என்பதும்; அப்பர் - சம்பந்தர் காலத்து (கி.பி. 600 - 660) அந்தணர்கள் நால்வர் குறிப்பிடப்படும்போது அது தமிழ் அந்தணர்களை முதன்மைப்படுத்தும் முயற்சியாக இருந்திருக்கலாம் என்பதும்; அப்பர், சம்பந்தர் காலத்திற்குப்பின்பும் சுந்தரர் காலத்திற்கும் (கி.பி. 840 - 865) இடைப்பட்டவர்கள் அதாவது (கி.பி. 660 - 865)

வரை உள்ள காலங்களில் அந்தணர்கள் அறுவராகவும் இருப்பது தமிழ் அந்தணர்களின் செல்வாக்கு ஓங்கிய காலமாகவும் கருதுகிறேன் (Gnanasambandan, 1999).

## அந்தணர்களின் பண்புகள்

நாயன்மார்களில் 13 பேர் அந்தணர்களாக இருக்கின்றனர். பல நாயன்மார்களின் வாழ்வில் இறைவனே அந்தணர் கோலம்கொண்டு அடியவரை சோதிப்பதை நாம் பெரியபுராணத்துள் காணமுடிகின்றது. ஆனாலும் இந்த அந்தண அடியார்களிடம் மென்மையான போக்கும் மற்ற அந்தணர் அல்லாத அடியாரிடம் வன்மையான போக்கும் காப்பியத்தில் காட்டப்படுகின்றன. இவர்கள் கண்ணப்பரைப் போலவோ, சிறுதொண்டரைப் போலவோ, ஏயர்கோன் கலிக்காமரைப் போலவோ, கோட்புலி நாயனாரைப் போலவோ செயற்கரிய செயல்களைச் செய்தவர்கள் அல்லர் என்பதைக் காணலாம்.

அந்தணர்கள் உடல் உழைப்பு அதிகம் இல்லாமல் அறிவுசார் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும்; அதிகாரத்திலிருப்பவர்களுக்கு அறிவுரை கூறும் இடத்திலும்; கட்டளை பிறப்பிக்கும் இடத்திலும் பெரும்பாலும் இருக்கின்றனர். நிரம்ப கல்வி அறிவு பெற்றவர்களாகவும், பொறுமை, ஒழுக்கம், சுயகட்டுப்பாடு, நன்றி உணர்ச்சி, பழி பாவங்களுக்கு அஞ்சி நடத்தல் முதலான பல பண்புகளைப் பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அன்று முதல் இன்று வரை பிராமணர்களின் பண்பு நலன்களில் பெரிய மாற்றங்கள் ஏதும் இன்றி சிற்சில மாற்றங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். பிராமணர்கள் கடல் கடந்து செல்லக்கூடாது என்ற மனு தருமத்தின் கட்டுப்பாடுகள் தற்போது இல்லை. கோவில் ஆலயப்பணியில் ஈடுபடுவோர், புரோகிதம் பார்ப்போர், சோதிடம் கணிப்போர் போன்றோர் எண்ணிக்கையும் தற்காலத்தில் குறைந்துள்ளது. பலரும் பொருளாதாரத்தில் உயர்வடைந்து இருப்பதையும்; சிலரே பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதையும் காண முடிகிறது. அரசின் இட ஒதுக்கீடு ஏதுமின்றி எவ்வித சலுகைகளும் இல்லாமல் தன் அறிவுத்திறத்தினாலேயே முன்னேறி வருகின்றனர். அதற்கு அவர்களது மரபும், சூழலும், குடும்பப்பண்பாடும் பெரிதும் காரணமாக இருக்கிறது (Rasamanickam, 2002).

## முடிவுரை

முன்னாளில் அந்தணர் எனும் சொல் அறவோர்களைக் குறித்துப் பிற்காலத்தில் பிராமணர்களுக்கும் வழங்கி வருகிறது. சங்க காலத்தில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, விண்ணந்தாயன் முதலானோர்களும், பல்லவர், சோழர் காலத்தில் வடநாட்டு வேதியர்களால் தமிழ் வேதியர்கள் ஒடுக்கப்பட்டும்; சம்பந்தர் தமிழ் வேதியர்களுக்காக குரல் கொடுத்து ஆரிய வேதியரை ஒடுக்கி தமிழையும், சைவத்தையும் உயர்த்திய நிகழ்வுகளும்; கி.பி.840-865 கால கட்டங்களில் தமிழ் வேதியர்கள் முதன்மைப்படுத்தப்பட்டும் வந்துள்ள நிகழ்வுகளைக் காணமுடிகிறது. சோழர் காலம் முதல் இக்காலம் வரை பிராமணர்கள் பல்வேறு துறைகளில் முதன்மை பெற்றும் வருகின்றனர். பிராமணர்கள் வாழ்வியல் முறைகளில் அன்று முதல் இன்று வரை வேதம் ஓதுதல், வேத முறைகளைப் பின்பற்றுதல், குல ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, புலால் மறுத்தல், சமய நம்பிக்கை, பண்பு நலன்கள் முதலானவைகளில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். உடல் உழைப்பு ஏதுமின்றி அறிவு பலம் கொண்டு ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கியும், நிர்வாகத்தில் உதவி செய்தும் வருகின்றனர். மாபெரும் புலவர் கபிலர், விண்ணந்தாயன், பெரும்பாணாற்றுப் படையும், பட்டினப்பாலையும் இயற்றிய உருத்திரங்கண்ணனார் முதலானோர்களும்; சுந்தரர், மாணிக்க வாசகர், திருஞான சம்பந்தர் முதலான சைவப் பெரியோர்களும், நாயன்மார்களும்; காளமேகப் புலவர் முதல் பாரதி வரை பல புலவர்களும்; திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் முதலான பல உரையாசிரியர்களும் பிராமணர்களே. அந்தணர்கள் தமிழிற்கு ஆற்றிய தொண்டு மிகப் பெரிது. தேச விடுதலை முதல் பல்வேறு தளங்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்கள். இன்றளவும் சமுதாயத்தில் தனக்கெதிரான பல போராட்டங்களையும் கடந்து சமுதாயத்திற்கு தன் பணிகளை அமைதியாக ஆற்றிவருவது பாராட்டத்தக்கதே.

## References

Anumandhan, K.R., (1977) Maurya Varalaru, Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai, India.

Gnanasambandan, A.S., (1999) Periya Puranam Or Aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan (2010) Kalithogai, Sri Senbaga Pathippakam, Chennai, India.

Puliyur Kesikan, (2002) Purananuru, Paari Nilayam, Chennai, India.

Rasamanickam, M., (2002) Periya Purana Aaraitchchi, Alamu Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2003) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

A.R. Sathiyaprakash, Changes in Brahmins' Social Life in the Contemporary Environment Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 59-63. DOI: https://doi.org/10.54392/ijmrd223S112